



Condition for Palam

# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் காஞ்சிபுரம்

## கீழ்ஒட்டிவாக்கம் ஊராட்சி

### மனைப்பிரிவு வரைபடம்

| | | |
|---|---|---|
| மாவட்டம் | --- | காஞ்சிபுரம் |
| வட்டம் | --- | வாலாஜாபாத் |
| கிராமம் | --- | கீழ்ஒட்டிவாக்கம் |
| நில அளவை எண்கள் | --- | **247/7B2,9A4, 256/2,257/1,258,259/1A,257/2, 1B1,1B2,2A,260/ 1,4,261/1,266/1B,2B1** ல அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் |
| அளவு | --- | 1 : 800 (1"=66') |
| இணையதள விண்ணப்ப எண் | --- | FD9RJX74 |
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பு | --- | 8.74 ஏக்கர் (அ) 35350.00 ச.மீ |
| கோரிய மனைகள் | | 221 |
| ஒதுக்கிய மனைகள் | | 216 + மனுதாரர் உபயோகம் - 2 |
| EWS மனைகளின் பரப்பு | | 2547.08 ச.மீ (10.57 %) |
| EWS மனை எண்கள் | | (150-167,175-178, 181-184,192-209 ) |

மனைப்பிரிவின் எல்லை
நிலையிலுள்ள சாலை

A.பொது ஒதுக்கீடுகள்: (உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.)

உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி:

| | | |
|---|---|---|
| பூங்கா-1 | ---- | 585.61 ச.மீ |
| பூங்கா-2 | ---- | 1873.76 ச.மீ |
| | | 2459.37ச.மீ 10.20 % |

B.பொது ஒதுக்கீடுகள்:

(TNCD&BR 2019, 47(8) -ன்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதி)

| | | | |
|---|---|---|---|
| பொது உபயோகம் | : | 128.71 ச.மீ | (0.53%) |
| தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பகுதி | : | 134.50 ச.மீ | (0.56%) |

மனைப்பிரிவு சாலை

| | கட்டிட வரம்பு | மூலைமுடக்கு |
|---|---|---|
| 7.20 மீ அகல சாலைக்கு | 1.5மீ | **1.5** மீ x 1.5மீ |
| 10.0மீ அகல சாலைக்கு | 3.0மீ | **1.5** மீ x 1.5மீ |

நிபந்தனைகள்:-

1. இம்மனைப்பிரிவுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. அரசாணை எண்.18 நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 31.01.2020 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை - ன்படி சாலை ஒதுக்கீடுகளை (ம) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்றும், நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

3. அரசாணை எண்.181 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித் துறை நாள்:09.12.2020-ன்படி சாலை அமைப்பு மற்றும் பொது திறவிட ஒதுக்கீடுகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்து அதன் அசல் ஆவணத்தினை மனுதாரர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரீசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.

6. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6'0" x 4'0" என்ற அளவுக்கு குறையாமல் காங்கீரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

7. சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்வாரியத்திற்காக (TANGEDCO) ஒதுக்கப்பட்டுள்ள இடத்தினை மின்வாரிய (TANGEDCO) பயன்பாட்டிற்காக இடத்தின் அளவுகள், பரப்பளவு ஆகிய விவரங்களுடன் குறிப்பிட்டு தானமாக தானப்பத்திரம் மூலம் மின்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. மனையிடத்தின் ஊடே செல்லும் தாழ்வழுத்த மின்கம்பிப்பாதை மனுதாரரால் சாலையின் போக்கிற்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.

9. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

10. மனையிடத்தின் ஊடே செல்லும் வாய்க்கால் பொது பணித்துறையின் நிபந்தனையில் தெரிவித்துள்ளவாறு மனுதாரர் சொந்த செலவில் சிறுபாலம் அமைக்கப்பட வேண்டும்

சிறப்பு நிபந்தனைகள்:-

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

ம.வ/ந.ஊ.து.இ(கா.மா)எண்: 98/2022 | வு

Signature Not Verified
Signed by: Deputy Director
Location:Kancheepuram
Date:2022.10.26 11:55:30

துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
காஞ்சிபுரம் மாவட்டம்.